# இளைஞர் மத்தியில் இளைஞர் தினம்!

2019, அக்டோபர், 15-ஆம் தேதி முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் பிறந்தநாளை முன்னிட்டுத் தமிழ்த்துறை சார்பாக முத்தமிழ்ப் பேரவை விழாவும், 'தகளி' இதழ் வெளியீட்டு விழாவும் நடந்தன. காலை 10.00 மணியளவில் கல்லூரிக் கருத்தரங்கக் கூடத்தில் நடந்த விழாவில் தலைமை ஏற்ற முதல்வர் முனைவர் எஸ். இராஜா சாமுவேல் தமிழ்மொழியின் பெருமையை அழுத்தமாகப் பதிவு செய்தார்.

பாரதிப் பாசறைத் தலைவர் - தமிழ்ச் செம்மல், நல்லாசிரியர், திருமந்திரத் திலகம் முனைவர் மா. கி. இரமணன் 'தகளி' இதழை வெளியிட புலமுதன்மையர் முனைவர் ஆர். சுபாஷினி பெற்று மகிழ்ந்தார். இதழில் வெளியான மாணவர்களின் படைப்பைத் திறனாய்வு செய்த சிறப்பு விருந்தினர் மேதகு அப்துல்கலாமின் நற்பண்புகளையும், சாதனைகளையும் வரிசைப்படுத்தினார்.

மாணவர்களிடம் உரையாற்றிய நிலையிலேயே இவ்வுலக வாழ்வை விட்டு மறைந்த கலாமிற்கு முதலாமாண்டு சமூகப்பணி மாணவர்கள் ம. கீர்த்தனா நாட்டுப்புறப் பாடல் மூலமும், ஜி. யுகேந்திர பாரதி கவிதை மூலமும் வீரவணக்கம் செலுத்தினர். பறையடித்தும் கதை சொல்லியும் முதலாமாண்டு சமூகப்பணி மாணவர் பரத்குமார் அசத்த, நோக்கர் பார்வையாக முதலாமாண்டு சமூகப்பணி மாணவர் ஹ. யதீந்தரும், மூன்றாமாண்டு உளவியல் மாணவர் வே. கிருஷ்ணாவும் சிறப்பு விருந்தினர் கூறிய முக்கியமான கருத்துக்களை மீண்டும் நினைவுப்படுத்தினர்.

கல்லூரி நிர்வாகம் சார்பாக நிதி இயக்குநர் ஜான் ஐக்ரியா கலந்து கொண்டு சிறப்பு விருந்தினரைக் கௌரவித்ததும், வரவேற்புரை தொடங்கி நன்றியுரை வரை எல்லா நிகழ்வுகளையும் மாணவர்களே வடிவமைத்ததும் மேலும் சிறப்பு சேர்த்தன.